DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.19/2021

**P.W**.1 (LW2)

| | |
|---|---|
| Name | : திரு. கஜேந்திரன் |
| Father/Husband Name | : திரு, |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து ஏற்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.10.2025

முதல் விசாரணை - சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது மறைமலை நகர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2) கடந்த 31.05.2018ம் தேதி காவல் ஆய்வாளர் திரு. சஞ்சீவி அவர்களுடன் தலைமை காவலர் 221 குமார், நான் ஆகியோர் ரகசிய தகவலின் பேரில் அமனம்பாக்கம் அம்பேத்கார் தெருவில் சென்று பார்க்கும் போது அங்கு ஒரு நபர் ஒரு பைக்கில் ஒரு கோணி பையில் எதையோ வைத்து விற்றுக் கொண்டிருப்பது போல் இருந்தது. உடனே சென்று அவரை மடக்கி பிடித்து அவரிடமிருந்த கோணி பையில் சோதனை செய்து பார்த்தபோது அதில் 100 எம்.எல் அளவு கொண்ட 1050 பாக்கெட்டுகள் மொத்தம் 105 லிட்டர் திரவம் இருந்தது. அதில் இருந்து ஒரு பாக்கெட்டை கிழித்து நுகர்ந்து பார்க்கும் போது கண் எரிச்சல் மற்றும் வாய்கொமட்டல் ஏற்பட்டது. எனவே அந்த திரவம் நீர் கலந்த விஷ நெடியுடன் கூடிய எரிசாராயம் என்று தெரிய வந்தது. எதிரியை கைது செய்து அவரிடமிருந்த வழக்கு சொத்துக்களை பொது ஜனங்கள் யாரும் முன்வராததால் எங்கள் முன்னிலையில் மகஜரில்

கைப்பற்றினார். கைப்பற்றுதல் மகஜரில் நானும், தலைமைக் காவலர் 221 குமார் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **(கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின் ரசாயன பகுப்பாய்விற்காக வேண்டி கோணியிலிருந்து சுமார் 500 எம்.எல் அளவுகொண்ட 6 பிளாஸ்டிக் பாட்டில்களில் எடுத்துக் கொண்டு மீதி இருந்த எரிசாராயத்தை சம்பவ இடத்திலேயே கொட்டி அழிக்கப்பட்டு ஆய்வாளர் அழித்தல் மகஜர் தயார் செய்தார். அழித்தல் மகஜரில் நானும், 221 குமார் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் அழித்தல் மகஜரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **(அழித்தல் மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. பின் எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் காவல் நிலையம் வந்து எதிரி மீது கு.எண். 379/2018 பிரிவு 4(1)(aaa), 4(1-A) TNP Act r/w 7 & 11 of RS Rules-ன் படி காவல் ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -</u>**

பொதுவாக எந்த ஒரு பணிக்கு சென்றாலும் எங்கள் காவல் நிலையத்தில் உள்ள பொது நாட்குறிப்பில் குறிப்பிட்டுவிட்டு தான் செல்வோம் என்றால் சரிதான். நான் பாக்கெட் டைரி பராமரித்து வருகிறேன் என்றால் சரிதான். பொது நாட்குறிப்பேட்டு மற்றும் பாக்கெட் டைரியை பார்த்தால் நான் சொன்ன தேதியில் மதுவிலக்கு வேட்டைக்காக சென்று வந்த விவரம் தெரியவரும் என்றால் சரிதான். காலை 6.00 மணிக்கு மதுவிலக்கு வேட்டைக்கு நானும், காவல் ஆய்வாளர் மற்றும் தலைமை காவலர் 221 ஆகியோர் சென்றோம். மதுவிலக்கு வேட்டைக்காக காவல் ஆய்வாளரின் சொந்த வாகனத்தில் சென்றோம். நாங்கள் சென்ற வாகனத்தின் பதிவு எண் எனக்கு ஞாபகம் இல்லை. இந்த வழக்கு குறித்து நடைமுறைகள் 9 மணி முதல் 9.15 மணிக்கு முடிவு பெற்றது. எதிரியை காவல் ஆய்வாளர் எத்தனை மணிக்கு கைது செய்தார் என்றால் 9.30 மணி போல் சம்பவ இடம் சென்றோம். எதிரியை 9.30 மணியளவில் காவல்

ஆய்வாளர் கைது செய்தார். மதுவிலக்கு வேட்டைக்கு செல்லும் போது எந்த ஆவணங்களையும் கையில் எடுத்துக் கொண்டு போகமாட்டோம் என்றால் சரிதான். காவல் ஆய்வாளர் என்னிடம் இருந்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. அ.சா.ஆ.1 கைப்பற்றுதல் மகஜர், அ.சா.ஆ.2 அழித்தல் மகஜர் ஆகிய ஆவணங்கள் ஏற்கனவே தட்டச்சு செய்யப்பட்டு கோடிட்ட இடங்கள் பேனாவால் நிரப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்தை பார்வையிட்டு காவல் ஆய்வாளர் பார்வை மகஜர் தயார் செய்தார். நான் சொன்ன தேதியில், சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் மதுவிலக்கு வேட்டைக்கு எதுவும் செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில், சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் எதிரியிடமிருந்து எந்த வழக்கு சொத்தும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து வழக்கிற்காக பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எங்கள் காவல் நிலையத்திலிருந்து புள்ளிவிவரக்கணக்கிற்காக எதிரியின் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.